# BSNL ஊழியர் சங்கம்

## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:61** **தேதி:-25.08.2015**

**ஒப்பந்த ஊழியர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் 15,000 கேட்டு ஏழு மையங்களில் கோரிக்கை மனு அளித்தல்**

அன்பார்ந்த தோழர்களே,

குறைந்தபட்ச மாத ஊதியம் ரு.15ஆயிரம் வழங்ககோரி BSNL ஊழியர் சங்கமும், தமிழ்நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கமும் இணைந்து இன்று 7 மையங்களில் தொழிலாளர் நலத்துறை அலுவலகங்களில் மனு கொடுத்தனர். BSNL நிறுவனத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றும் ஒப்பந்த ஊழியர்களுக்கு குறைந்த பட்சம் மாத ஊதியம் ரு.15ஆயிரம் வழங்க வேண்டும். அவர்களுக்கு EPF, ESI முறையாக செலுத்த வேண்டும். போனஸ் வழங்க வேண்டும். Skilled மற்றும் Semi Skilled ஊதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இப்போராட்டம் நடைபெற்றது.

சென்னையில் உள்ள தொழிலாளர் நலத்துறை அலுவலகத்தில் உள்ள மண்டல தொழிலாளர் நல ஆணையர் திரு சேகர் அவர்களிடம் BSNLEU மாநில செயலாளர், மாநில பொருளாளர், மாநில உதவி பொருளாளர், TNTCWU சங்கத்தின் மாநில தலைவர் தோழர் M.முருகையா, வேலூர் மாவட்ட தலைவர் மற்றும் செயலாளர் உள்ளிட்ட தோழர்கள் மனு அளித்து விவாதித்தனர்.

கோவையில் நடைபெற்ற மனு அளிப்புக் கூட்டத்தில் TNTCWU மாநில செயலாளர் தோழர் C.வினோத் குமார் தலைமையில் கோவை, நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களை சார்ந்த BSNLEU மற்றும் TNTCWU தோழர்கள் 300க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். நாகர்கோவில், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களை சார்ந்த 250 தோழர்கள் தூத்துக்குடியிலும், மதுரை, விருதுநகர், காரைக்குடி ஆகிய மாவட்டங்களை சார்ந்த 400 தோழர்கள் மதுரையிலும், பாண்டிச்சேரி மற்றும் கடலூர் மாவட்டங்களை சார்ந்த 400 தோழர்கள் பாண்டிச்சேரியிலும், சேலம், தர்மபுரி மாவட்டங்களை சார்ந்த 300 தோழர்கள் சேலத்திலும், திருச்சி, தஞ்சாவூர் மற்றும் கும்பகோணத்தை சார்ந்த 400 தோழர்கள் திருச்சியிலும் இன்று தொழிலாளர் நல அலுவலகங்களில் இந்த மனுக்களை அளித்துள்ளனர்.

500 நிரந்தர ஊழியர்கள் உள்ளிட்ட சுமார் 2,000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இந்த போராட்டத்தில் கலந்துக் கொண்டுள்ளனர். கோவை சென்னை உள்ளிட்ட பகுதிகளில் ஊர்வலம் நடத்த காவல் துறை அனுமதி கிடைக்காத காரணத்தால் ஊர்வலம் நடைபெறவில்லை. தூத்துக்குடி, மதுரை, திருச்சி, சேலம் மற்றும் பாண்டிச்சேரி உள்ளிட்ட இதர ஐந்து மையங்களிலும், கண் கவர் ஊர்வலங்களாக தோழர்கள் நகர்களின் முக்கிய சாலைகள் வழியாக கோஷங்களை முழங்கிய வண்ணம் சென்று இந்த மனுக்களை அளித்துள்ளனர்.

இந்த போராட்டத்தில் கலந்துக் கொண்ட நிரந்தர ஒப்பந்த ஊழியர்கள் அனைவருக்கும் தமிழ் மாநில சங்கம் தனது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் உரித்தாக்கிக் கொள்கிறது. இந்த போராட்டத்திற்கான தயாரிப்புகளை முன்னின்று நடத்திய BSNLEU மற்றும் TNTCWU மாநில சங்க நிர்வாகிகள் மற்றும் மாவட்ட செயலாளர்களையும் தமிழ் மாநில சங்கம் மனதார பாராட்டுகிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்